# பொதுத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

## மானியக் கோரிக்கை எண். 38


# திரு. மு.க. ஸ்டாலின்

மாண்புமிகு முதலமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள் | 8 |
| 3. | தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள் மற்றும் பொது விடுமுறை நாள்கள் அறிவிப்பு; விருதுகள் | 10 |
| 4. | அரசு விருந்தினர் இல்லங்கள் | 18 |
| 5. | அயல்நாட்டினர் | 32 |
| 6. | முதல்வரின் முகவரித் துறை | 36 |
| 7. | முன்னாள் படைவீரர் நலத்துறை | 44 |
| 8. | தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) | 78 |
| 9. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | 84 |
| 10. | முடிவுரை | 90 |

## பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023–2024

### 1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து அலுவலகங்களையும், இணைந்து பணியாற்ற வேண்டிய இன்னபிற துறைகளையும் ஒருங்கிணைக்கின்ற ஒப்பற்ற பணியை தலைமைச் செயலகம் நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாடு அரசின் நரம்பு மண்டலமாக மட்டும் செயல்படாமல், ஒன்றிய அரசின் துறைகளையும், பாதுகாப்புப் படைகளின் செயல்பாடுகளையும், நுண்ணறிவுப் பிரிவின் நுட்பங்களையும், அரசு சாரா நிறுவனங்களின் பங்களிப்பையும் ஒருங்கிணைப்பதோடு, வெளிநாட்டுத் தூதரகங்களைத் தொடர்புகொள்வது போன்ற பல்வேறு பணிகளைத்

தலைமைச் செயலகம் ஆற்றுவதற்கு முக்கியச் செயலியாய் இருப்பது பொதுத் துறை.

அனைத்துத் துறைகளும் பொதுத் துறையின் பங்களிப்பைப் பொருத்தே தங்களைச் செழுமையாக்கிக்கொண்டும், செம்மைப்படுத்திக் கொண்டும், கூர்மைப்படுத்திக் கொண்டும் செயல்படுகின்றன. அத்தனை பணிகளை ஒருங்கிணைத்தாலும் விழிகளுக்குத் தெரியாமல் இருக்கின்ற அவயங்களைப்போல பொதுத் துறை செயல்படுகிறது, அலைகடல்போலின்றி ஆழ்கடல்போல மௌனமாக வினையாற்றுகிறது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பதவியேற்பு விழாவையும், அமைச்சரவை பதவியேற்கும் நிகழ்ச்சியையும், மாண்புமிகு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பொறுப்பேற்கும் மரபையும் நெறிபடவும்

நேர்த்தியாகவும் கையாளும் பொறுப்பு பொதுத் துறையைச் சார்ந்தது.

மரபுசார் அனைத்துப் பணிகளையும் முக்கியப் பெருமக்கள் வருகையின்போது சிவப்புக் கம்பளம் விரித்து, மகிழ்ச்சியோடு திரும்பும்வரை விருந்தோம்பியும், தேசிய அரசு விழாக்களைச் செவ்வனே நடத்தி நாட்டுப் பற்றை நாடி நரம்புகளிலெல்லாம் பாய்ச்சியும், தேசப் பாதுகாப்பிற்குத் தேவையான முன்னடவடிக்கைகளை எடுத்தும், ஆரவாரமின்றி அமைதியாக அரும்பணி ஆற்றும் துறையாகத் திகழ்கிறது பொதுத் துறை. அது விடுமுறை நாட்களுக்கு விடுப்புக் கொடுத்துவிட்டு அனைத்து நாட்களிலும் அல்லும்பகலும் வெள்ளத்தனைய மலர்நீட்டம் போல கடின உழைப்பை மேற்கொள்கிறது.

சட்டம்—ஒழுங்காக இருந்தாலும், மாவட்டத்தில் சிக்கல்கள் ஏற்பட்டாலும், இந்திய ஆட்சிப் பணி

அலுவலர் இடங்களை நிரப்புவதானாலும், மாவட்ட வருவாய் அலுவலர்கள் பணியமைப்பாக இருந்தாலும், அரசின் உயர் அலுவலர்களுக்குப் பல அனுமதிகளை வழங்குவதாக இருந்தாலும், அமைச்சர் பெருமக்களின் அலுவலகத் தேவைகளை நிறைவேற்றுவதாக இருந்தாலும், மாவட்ட நீதிபதிகள், உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்களின் நியமனமாக இருந்தாலும், அயலகத் தமிழர்களின் நலனாக இருந்தாலும், இலங்கைத் தமிழர்களின் நலனைக் கட்டிக் காப்பதாக இருந்தாலும், மனித உரிமைகளில் அத்துமீறல்கள் நிகழும்போது அவற்றில் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், அவற்றைக் கையாளுவது பொதுத் துறையின் கடமையாகும்.

புது தில்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லத்தையும், உதகமண்டலத்தில் இருக்கும் தமிழகம் விருந்தினர் இல்லத்தையும், சென்னையில் அமைந்துள்ள சேப்பாக்கம் அரசு விருந்தினர்

இல்லத்தையும், தலைமைச் செயலகத்தையும் பராமரித்துப் பளபளவென பரிமளிக்கச் செய்யும் பொறுப்பு பொதுத் துறைக்கே உள்ளது.

தாய் மண்ணிற்காகத் தன்னுயிரை ஈந்த விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நன்றிக் கடனையும், கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் பனியிலும் எல்லையில் போராடி' நம் இன்று'க்காகத் 'தங்கள் நேற்றை'த் தியாகம் செய்த முன்னாள் படைவீரர்கள் நல வாழ்வைப் பேணும் அர்ப்பணிப்பையும் அக்கறையோடு ஆற்றுவது பொதுத் துறையே.

தமிழ்நாட்டில் மூலைமுடுக்குகளில் இருப்பவர்களுக்கும், "முதல்வரின் முகவரி" கலங்கரை விளக்காகத் திகழ்கிறது. தங்கள் குறைகளை மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்கே அனுப்பி வைத்துத் தங்கள் கண்ணீருக்குப் பரிகாரம் கிடைக்கும்

என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் பொது மக்கள். அவற்றை வரி விடாமல் படித்துத் தொடர்புடைய துறையைத் தொடர்புகொண்டு எளியவர்களின் இன்னல்களைப் போக்கும் இனிய துறையாக இருக்கும் முதல்வரின் முகவரி துறையை வழிநடத்துவதும் பொதுத் துறையே.

முக்கியமான முடிவுகளை அரசு மேற்கொள்ளும்போதெல்லாம் அமைச்சரவைக் கூட்டத்தில் அதை முன்மொழிந்து விவாதித்து முடிவெடுப்பதே நடைமுறை. அமைச்சரவைக் கூட்டங்களைத் திறம்பட நடத்தி கூட்டக் குறிப்புகளைத் தயாரித்து ஒப்புதல் பெற்று அரசாணைகளாக அவற்றை வெளியிடச் செய்யும் செயலையும் பொதுத் துறையே மேற்கொள்கிறது.

அரசு அறிவிக்கின்ற பொது விடுமுறைகளையும், உள்ளூர் விடுமுறைகளையும் தொகுத்துத் தருகிற

துறையாக இருக்கிறது பொதுத் துறை. அத்துடன் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் பட்டியலையும் அவ்வப்போது பணி விவரங்களோடு வெளியிட்டு அவர்களுடன் தொடர்புகொள்வதை எளிதாக்குவதும் பொதுத் துறை.

தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980, அந்நியச் செலாவணி பாதுகாப்பு, கள்ளக் கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1974–ஐ நடைமுறைப்படுத்துதல் மற்றும் சட்டம்–ஒழுங்கு தொடர்பான விசாரணை ஆணையங்களை அமைக்கும் பணியையும் பொதுத் துறை மேற்கொள்கிறது.

தேசிய அளவில் வழங்கப்படுகிற பத்ம விருதுகளுக்கும், மற்ற விருதுகளுக்கும் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்கிற பணியையும் பொதுத் துறையே தோள்களில் சுமக்கிறது.

இவை தவிர மற்றத் துறைகளால் ஆற்ற முடியாத எந்தப் பணியாக இருந்தாலும் அதை நிறைவேற்றுகிற பணியைச் சிரமேற்கொண்டு செய்து வருகிறது பொதுத் துறை.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இருப்பதனால் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள்

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மாண்புமிகு இந்தியப் பிரதமர், வெளிநாட்டு அரசின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் பிரமுகர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் / உயர் ஆணையர்கள் ஆகியோர் தமிழ் நாட்டுக்கு வருகை புரியும் போது மரபு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

உள்துறை, மருத்துவத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து சுமுகமான முறையில் பொது (மரபு)த் துறையால் செய்யப்படுகின்றது. மேலும், மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோருடன் வெளிநாட்டு அமைச்சர்கள் / தூதுவர்கள் / முக்கிய பிரமுகர்களுக்கு சந்திப்பு ஏற்பாடுகள் ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் இசைவுடன் செய்யப்படுகின்றது.

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்த முக்கிய தகைசால் பெருமக்களின் விவரம் பின்வருமாறு:–

| மிக மிக முக்கிய நபர்களின் விவரம் | வருகையின் எண்ணிக்கை |
|---|---|
| மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் | 2 |
| மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் | 6 |
| மாண்புமிகு இந்தியப் பிரதமர் | 3 |

| | |
|---|---|
| வெளிநாட்டு முக்கிய தகைசால் பெருமக்கள் | 3 |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்த முக்கிய பிரமுகர்களின் விவரம் பின்வருமாறு:–

| மிக மிக முக்கிய நபர்களின் விவரம் | வருகையின் எண்ணிக்கை |
|---|---|
| வெளிநாட்டு தூதுவர்கள் | 10 |
| வெளிநாட்டு அமைச்சர் | 3 |
| வெளிநாட்டு துணைத் தூதுவர்கள் | 5 |

## 3. தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள் மற்றும் பொது விடுமுறை அறிவிப்பு; விருதுகள்

### 3.1. தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள் அறிவிப்பு மற்றும் விருதுகள்

இந்திய தேசிய விழாக்களான "சுதந்திரத் திருநாள்" மற்றும் "குடியரசுத் திருநாள்" விழாக்களை,

மாநில அளவில் நாட்டுப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைப் பொது (பொது–I)த் துறை செய்கிறது.

ஆண்டுதோறும் சுதந்திர திருநாள் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் ஜீன் மாதம், மத்தியில் தொடங்கி தேவையான முன்னேற்பாட்டு பணிகள் மற்றும் ஒத்திகைகள் குறித்து தொடர்புடைய துறைகளுக்கு தகவல் அனுப்புதல் மற்றும் செயலாளர், பொதுத்துறை அவர்களின் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்துதல் உள்ளிட்ட பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. சுதந்திர திருநாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவல் துறையின் 13 படைப்பிரிவுகளைச் சார்ந்த சம்பிரதாய அணிவகுப்பு மரியாதையை ஏற்று புனித ஜார்ச் கோட்டை, கோட்டைக் கொத்தளத்தில் உள்ள தேசிய கொடியினை ஏற்றி வைப்பார். இவ்விழாவில் தமிழ்நாட்டிற்கும், தமிழ் இன

வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவருக்கு வழங்கப்படும் **"தகைசால் தமிழர் விருது"** வழங்கப்படுகிறது. இவ்விருதானது தமிழக அரசால் 2021–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு ரொக்கப்பரிசாக ரூ.10 இலட்சம் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. துணிவு மற்றும் சாகசச் செயலுக்காக பெண்களுக்கு **"கல்பனா சாவ்லா விருது"** போன்ற இதர விருதுகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சுதந்திர திருநாளன்று வழங்கப்படுகிறது.

குடியரசு திருநாள் விழா ஏற்பாடுகள் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் மத்தியில் தொடங்கி தேவையான முன்னேற்பாட்டு பணிகள் மற்றும் ஒத்திகைகள் குறித்து தொடர்புடைய துறைகளுக்கு தகவல் அனுப்புதல் மற்றும் செயலாளர், பொதுத்துறை அவர்களின் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்துதல் உள்ளிட்ட பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. இவ்விழா நிகழ்வுகள் சென்னை

காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் மாண்புமிகு ஆளுநர் அவர்களால் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டு, முப்படைகளான இராணுவப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக்காவல் படை, துணை இராணுவப்படை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் படை, தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் படை மற்றும் பள்ளிக் கல்லூரிகளின் இசை வாத்தியக்குழு உள்ளிட்ட 49 படைப்பிரிவுகளைச் சார்ந்த படைப்பிரிவுகளின் அணிவகுப்பு மரியாதையுடன் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. மேலும், பல்வேறு துறைகளைச் சார்ந்த வண்ணமயமான அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெறும். இவ்விழாவில், வீரதீர செயலுக்கான **"அண்ணா விருது"**, **"சிறந்த அணிவகுப்பு படையினருக்கான விருது"** போன்ற பிற விருதுகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகின்றது.

விருதுகளுக்கான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம், "தகைசால் விருது" தவிர பிற விருதுகளுக்கு awards.tn.gov.in என்ற இணையதளம் வழியாக பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பரிசீலிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்களில், தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் விண்ணப்பங்கள் குறித்து புலனாய்வுத் துறையின் அறிக்கை பெறப்பட்டு, அதனடிப்படையில் விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

மேலும், ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளான **பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, ஜீவன்ரக்க்ஷா பதக்கம், அசோக் சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா, சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதி பரிசு** போன்ற விருதுகளுக்கான

பரிந்துரைகள் இத்துறையின் மூலம் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினமான ஜனவரி 30–ஆம் நாளினை ஒன்றிய அரசின் அறிவிப்பின்படி, **"தியாகிகள் தினமாகவும்",** 2021–ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டப்படி, தந்தை பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17–ஆம் நாளினை, ஒவ்வொரு ஆண்டும் **"சமூகநீதி தினமாகவும்"** அனுசரிக்கும்பொருட்டு, தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உறுதிமொழியேற்பு செய்து வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளும் இத்துறையால் செய்யப்படுகின்றது. மேலும், 2022–ஆம் ஆண்டில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டப்படி, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் 14–ஆம் நாளினை, ஆண்டுதோறும் **"சமத்துவ நாள்"** ஆக அனுசரிக்கப்பட்டுவருகிறது. தலைமைச் செயலகம் முதல் அனைத்து அரசு அலுவலகங்களிலும்**"சமத்துவ நாள்"** உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் அறிவிக்கும் போது, மாவட்ட ஆட்சியர்கள் / காவல் / வன அலுவலர்கள் மாநாட்டை ஒருங்கிணைத்து நடத்துவது இத்துறையின் பொறுப்பாகும். கடந்த ஆண்டு மார்ச், 2022–ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள் / காவல் / வன அலுவலர்கள் மாநாடு நடத்தப்பட்டது.

### 3.2. பொது விடுமுறை அறிவிப்பு

மாநிலத்தின் பொது விடுமுறை தொடர்பான அறிவிப்புகள் செலாவணி முறிச்சட்டம் 1881–ன் கீழ்

இத்துறையால் அறிவிக்கப்படுகிறது. 1957–ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால், மாநில அரசுகள் தத்தம் மாநிலங்களுக்குச் செலாவணி முறிச்சட்டம், 1881–ன் கீழ் பொது விடுமுறை நாள்கள் அறிவிக்க (வங்கிகள் உட்பட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செலாவணி முறிச்சட்டம் 1881–ன்படி, கீழ்காணும் அதிகார அமைப்புகளிடமிருந்து அறிக்கைப் பெற்று, அதன் அடிப்படையில் பொது விடுமுறை நாள்களின் பட்டியல் முடிவு செய்து ஒவ்வொரு ஆண்டும் அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை; தமிழக அரசின் தலைமைக் காஜி; தென்னிந்தியக் கிறிஸ்துவ திருச்சபையின் மதராஸ் மறை மாவட்டப் பேராயர்; மயிலாப்பூரில் உள்ள மதராஸ் மறை மாவட்டப் பேராயர்; பாரத ரிசர்வ் வங்கி, சென்னை; வான் கோளியல் மையம், கொல்கத்தா; இந்திய வானிலை ஆய்வுத் துறை, கொல்கத்தா; இந்திய வானியற்வியல் நிறுவனம், பெங்களூரு; தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில்

சபை, சென்னை மற்றும் பகவான் மகாவீர் அகிம்சா பிரச்சார சங்கம், சென்னை.

## 4. அரசு விருந்தினர் இல்லங்கள்

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை; புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை; அரசு ஓய்வு இல்லம் சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்; வைகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி; பொதிகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி ஆகிய அரசு விருந்தினர் இல்லங்கள் பொதுத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

### 4.1. அரசு விருந்தினர்கள் மற்றும் தொகை தரு விருந்தினர்கள்

#### 4.1.1. அரசு விருந்தினர்கள்

தமிழகத்திற்கு வருகை தரும் மிக முக்கிய, முக்கியப் பிரமுகர்கள் மாண்புமிகு குடியரசுத்தலைவர்;

மாண்புமிகு குடியரசுத்துணைத் தலைவர்; மாண்புமிகு பாரதப்பிரதமர்; உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி; பிற மாநில ஆளுநர்கள்; முன்னாள் குடியரசுத்தலைவர்; முன்னாள் குடியரசுத் துணைத்தலைவர்; முன்னாள் பாரதப்பிரதமர்; மக்களவையின் சபாநாயகர்; துணை சபாநாயகர்; ஒன்றிய அமைச்சர்கள்; மக்களவை மற்றும் மாநிலங்களவையின் எதிர் கட்சித்தலைவர்; பிற மாநில முதலமைச்சர்கள்; அமைச்சர்கள்; நிதி ஆயோக் துணைத்தலைவர்; பிற மாநில சபாநாயகர்கள்; துணைச் சபாநாயகர்கள்; இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்; ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர்கள் / உறுப்பினர்கள்; அயல் நாட்டுப் பிரமுகர்கள்; மாண்புமிகு உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள்; ஒன்றிய அரசின் செயலாளர்கள் ஆகிய அனைவரும் அரசு விருந்தினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு வரவேற்பு, உணவு, மருத்துவச் சேவை, தொலைபேசி

கட்டணம், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு வசதிகள் ஒன்றிய அரசின் உள்துறை நிர்ணயித்துள்ள பட்டியலின்படி கொடுக்கப்படுகின்றன.

### 4.1.2. தொகை தரு விருந்தினர்கள்

மரபு கையேட்டின்படி, அரசு விருந்தினர் பிரிவின் கீழ் வராதவர்கள் தொகை தரு விருந்தினர்களாக கருதப்படுவர். கட்டணம் செலுத்துதல் அடிப்படையில், தங்கும் வசதி, போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

## 4.2. அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை

சென்னை, சேப்பாக்கம், அரசு விருந்தினர் இல்லம் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது, இவ்வில்லத்தில் 6 தொகுப்பு அறைகள், 11 சொகுசு அறைகள், 16 நிலையான அறைகள் ஆகிய 33 அறைகள் உள்ளன.

## 4.3. புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை

சென்னை, ஓமந்தூரார் தோட்டம், புதிய அரசு விருந்தினர் இல்லமானது, 2018–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவ்வில்லத்தில், 40 சொகுசு அறைகள், 4 சிறிய கூட்டரங்கங்கள் 2 பெரிய கூட்டரங்கங்கள், 2 உணவு அருந்தும் அறைகள் மற்றும் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைந்துள்ளன.

வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை மற்றும் புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை ஆகியவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார். அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம் ஆகிய விருந்தினர் இல்லங்களில் அரசு விருந்தினர்கள் மற்றும் தொகை தரு விருந்தினர்கள் தங்குவதற்கு

www.sgh.tn.gov.in என்னும் இணையத்தின் வலை தளப்பக்கத்தின் வாயிலாக முன் பதிவினைச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2022 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023 மார்ச் 31–ம் நாள்வரை அரசு விருந்தினர் இல்லங்களில் தங்குமிட வசதி வழங்கப்பட்ட விவரம்:–**

| வ. எண். | விருந்தினர்கள் | அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை | புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை |
|---|---|---|---|
| 1. | அரசு விருந்தினர்கள் | 34 | 54 |
| 2. | தொகை தரு விருந்தினர்கள் | 519 | 1791 |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, இவ்வரசு விருந்தினர் இல்லங்களில் அரசால் பெறப்பட்ட வருவாய் ரூ.30,26,247/– ஆகும்.

**4.4. அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை**

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அரசு ஓய்வு இல்லம், சென்னைக்கு வருகைபுரியும் இளநிலை அரசு அலுவலர்கள் தங்குவதற்காக 25 அறைகளுடன் 1981–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அக்கட்டடம் மிகவும் பழுதடைந்ததால், பிப்ரவரி, 2021–ல் இடிக்கப்பட்டு, தற்போது புதிய அரசு ஓய்வு இல்லம் கட்டுவதற்கான பணி முடியும் தருவாயில் உள்ளது. இவ்வில்லம், 55 நிலையான அறைகள், 4 சொகுசு அறைகள், உணவு அருந்தும் கூடம், சலவையகம், சமையல் அறை, அலுவலக அறை, நுழைவுக்கூடம் மற்றும்

2 மின்தூக்கிகள் ஆகியவற்றினைக் கொண்டதாக இருக்கும்.

**4.5. தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்**

அரண்மோர் அரண்மனை என்று அறியப்பட்ட உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் மாளிகையானது மரங்கள் சூழ்ந்த பகுதிக்கு மத்தியில் உதகமண்டலம் இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றிற்கு 2.8 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இம்மாளிகையானது, ஜோத்பூர் மகாராஜாவால் 1925–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஜோத்பூர் மகாராஜாவிடமிருந்து தமிழ்நாடு அரசு இவ்வரண்மனையை 28.12.1958 அன்று விலைக்கு வாங்கி அரசுடைமையாக்கியது. இவ்வரண்மனை 36 ஏக்கர் நிலப்பரப்பில் அழகிய கட்டிடங்கள், பசுமையான புல்வெளிகள் மற்றும் தோட்டங்களால் சூழப்பட்டு தோட்டக்கலைத் துறையால் பராமரிக்கப்பட்டு

வருகிறது. இவ்வரண்மனையில் 18 முக்கிய விருந்தினர் அறைகள், 20 அறைகள், 2 விடுதி அறைகள், 200 நபர்கள் அமரக்கூடிய அழகிய அவைக்கூடம் மற்றும் 30 பேர் அமரக் கூடிய சிறிய அவைக் கூடமும் உள்ளன.

உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் மாளிகையில் மிக முக்கிய விருந்தினர்கள், அமைச்சர்கள், நீதித்துறை உயர்அதிகாரிகள், அரசு அதிகாரிகள் மற்றும் அரசின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பின் கீழ் பணியாற்றுபவர்கள் அரசு பணி நிமித்தமாக தங்குவதற்கு ஏதுவாக வசதிகள் செய்து தரப்படுகிறது. இவ்விருந்தினர் மாளிகை வட்டாட்சியர் நிலையில் உள்ள வரவேற்பு அலுவலர் மற்றும் 13 ஊழியர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்விருந்தினர் மாளிகையில், நவீன உடற்பயிற்சிக் கூடம், பில்லியட்ஸ் மேசை, டென்னீஸ் மைதானம் போன்ற சிறப்பு வசதிகளும் உள்ளன.

இவ்விருந்தினர் மாளிகையில், அறைகள் ஒதுக்கீடு https://tamizhagamguesthouse.tn.gov.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள் வரை, உதகமண்டலம், தமிழக விருந்தினர் மாளிகையில் தங்கிச் சென்ற விருந்தினர்களின் விபரம் கீழ்வருமாறு:–**

| வரிசை எண் | விருந்தினர்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு விருந்தினர்கள் | – |
| 2. | பிற விருந்தினர்கள் | 3926 |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, அரசால் பெறப்பட்ட வருவாய் ரூ.75,09,047/– ஆகும்.

## 4.6. தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி

புதுடெல்லியில் அமைந்துள்ள தமிழ்நாடு இல்லம் தமிழ்நாடு அரசினுடைய பெருமையை பறைசாற்றும் மதிப்புமிக்க இல்லமாகும். தமிழ்நாடு இல்லமானது, வைகை தமிழ்நாடு இல்லம் மற்றும் பொதிகை தமிழ்நாடு இல்லம் என இரண்டு இல்லங்களாக, முதன்மை உள்ளுறை ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாடு இல்லமானது வரவேற்பு, சமையல், பராமரிப்பு, பொறியியல், தொடர்பு, நிர்வாகம் மற்றும் கணக்கு போன்ற பல்வேறு பிரிவுகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்விருந்தினர் மாளிகையில், அறைகள் ஒதுக்கீடு https://tnhouse.tn.gov.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது.

### 4.6.1. வைகை தமிழ்நாடு இல்லம்

வைகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லியிலுள்ள சாணக்யபுரி கௌடில்யமார்க் எண் 6–ல் 5773.19 ச.மீ நிலத்தில் 1962 ஆம் ஆண்டு கட்டப்பட்டது, அதன் தொடர்ச்சியாக, 1976–ஆம் ஆண்டு அதே வளாகத்தில் மூன்று அடுக்குமாடிகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. வைகை தமிழ்நாடு இல்லத்தில் 7 சொகுசு அறைகளும் மற்றும் 40 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில், முக்கியப் பணிகள் அனைத்தும் அதாவது வரவேற்பு, உணவகம், இல்லக் காப்பகம், மின்சாரம், குழாய்ப்பணிகள் மற்றும் குளிர்சாதனம் ஆகியவை தமிழ்நாடு இல்லம், புதுடில்லிக்கான நிரந்தர அரசு ஊழியர்களால் செயல்படுத்தப்படுகிறது. தற்போது, வைகை தமிழ்நாடு இல்லம் முழுவதையும் ரூ. 257 கோடி திட்டமதிப்பீட்டில் மூன்று தொகுதிகளாக (மிகமிக முக்கிய விருந்தினர்கள் தங்கும் இடம், புதிய விருந்தினர் இல்லம் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு)

மறுகட்டமைப்பு செய்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 4.6.2. பொதிகை தமிழ்நாடு இல்லம்

பொதிகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லியிலுள்ள சாணக்யபுரி திக்கேந்தர்ஜித் மார்க், எண் 9–ல் 7956.62 ச.மீ. நிலத்தில் கட்டப்பட்டு, 16.09.2004 முதல் பயன்பாட்டில் உள்ளது. பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் 25 சொகுசு அறைகள் மற்றும் 45 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில் சமையல், இல்லக்காப்பகம், பாதுகாப்பு, குளிர்சாதன பராமரிப்பு, குழாய்ப்பணிகள், தீயணைப்பு மற்றும் தோட்டக்கலை போன்றவை அனைத்தும் தனியாரின் ஒப்பந்தத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நவீனஒலி, ஒளிகருவிகளுடன் 90 பார்வையாளர்கள் அமரும் வசதி கொண்ட அரங்கம் பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் பயன்பாட்டில் உள்ளது. பொதிகை தமிழ்நாடு இல்லத்திலுள்ள மருத்துவ உதவி

மையம் விருந்தினர்களுக்கும், அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் குறைந்தபட்ச மருத்துவ உதவி வழங்கி வருகிறது. பொது மருத்துவர், திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாலை 4.30 முதல் 6.00 மணி வரை பொதிகை-தமிழ்நாடு இல்லத்தில் மருத்துவ ஆலோசனை வழங்குகிறார். உள் அரங்கு உடல்நலம் மேம்பாட்டு மையமும் உள்ளது.

இரண்டு தமிழ்நாடு இல்லத்திலும் உரிய வசதிகளுடன் வணிக மையம் கம்பியில்லாத இணையத் தொடர்பு வசதி, உள், வெளியரங்கு உடல் நலம் மேம்பாட்டு மையம். குழந்தைகள் மற்றும் விருந்தினர்களுக்கான பொழுது போக்கு மையம் ஆகியவை உள்ளன.

**2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள் வரை, புதுடெல்லி, தமிழ்நாடு இல்லத்தில் தங்கிச் சென்ற விருந்தினர்களின் விபரம் பின்வருமாறு:–**

| வரிசை எண் | விருந்தினர்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு விருந்தினர்கள் | 238 |
| 2. | பிற விருந்தினர்கள் | 8692 |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, அரசால் பெறப்பட்ட வருவாய் ரூ.4,19,00,073/– ஆகும்.

### 4.6.3. புதுடெல்லி, துவாரகா பகுதியில் மூன்றாவது விருந்தினர் இல்லம் அமைப்பது

மூன்றாவது விருந்தினர் இல்லம் கட்டுவதற்காக டெல்லி வளர்ச்சிக் குழுமத்தால் (Delhi Development Authority) புதுடெல்லியில் துவாரகா பகுதியில் மனை எண் 4–இல் பிரிவு 19–இல் 3197.58 சதுர மீட்டர் நிலம் ரூ. 25.82 கோடி நிரந்தர குத்தகைக்கு தமிழ்நாடு அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. அயல்நாட்டினர்

### 5.1. அயல்நாட்டினர் சட்டம்,1946

அயல்நாட்டினர் சட்டம் 1946–இன் கீழ் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, கடவுச்சீட்டு சட்டத்தினை மீறி சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும், நுழைவிசைவு(visa) விதிகளை மீறும் அயல்நாட்டினரது மீதுள்ள வழக்கில் அவர்கள் பிணையில் வரும்போதும், தண்டனைக் காலம் முடிவுற்று வெளிவரும் போதும், அயல்நாட்டினர் சட்டம், 1946, 3(2)(e)–இன் கீழ் அவர்களது இருப்பினை உறுதி செய்யும் வகையில் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, திருச்சிராப்பள்ளி சிறப்புமுகாமில் தங்கவைத்து, அயல்நாட்டினர் சட்டம், 1946, 3(2)(c)–இன் கீழ் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர். 2022 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023 மார்ச் 31–ம் நாள்வரை, 73 அயல்நாட்டினர் அவர் தம் தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## 5.2. தங்கும்காலத்தை நீட்டித்தல், நுழைவிசைவு வசதியுடன் தாய்நாடு சென்றுவர அனுமதித்தல்

இந்தியாவில் உரிய பயண ஆவணங்களுடன் தங்கியிருக்கும் பாகிஸ்தான், நாட்டைச் சேர்ந்த குடிமக்கள் நுழைவிசைவு கையேட்டின்படி தங்கும் காலத்தை நீட்டிப்பதற்கு அனுமதி கோரி, மண்டல அயல்நாட்டு பதிவு அலுவலக இணைய முகப்பு (IVFRT) மூலமாக பெறப்படும் முன்மொழிவுகள், மாநில அரசால் அனுமதி வழங்கப்படுகிறது. விதி விலக்கு தேவைப்படும் இனங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு இணையமுகப்பு (IVFRT) மூலமாக அனுப்பப்படுகிறது. இதன்மூலம், இவர்கள் தங்களது தாய்நாட்டிற்கு நுழைவிசைவு வசதியுடன் ஆண்டிற்கு ஒருமுறை சென்று வர அனுமதி வழங்கப்படுகிறது.

## 5.3. தாய்நாடு திரும்ப விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு நுழைவிசைவுக் கட்டணம் / மிகைத் தங்கல் தண்டத் தொகை விலக்களித்தல்

தமிழ்நாட்டில் 09.01.2015–க்கு முன்பே வருகை புரிந்து தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள், தன்விருப்ப அடிப்படையில் தங்களது தாய்நாட்டிற்கு திரும்ப விண்ணப்பிக்கும்போது, அரசிற்குச் செலுத்த வேண்டிய நுழைவிசைவுக் கட்டணம், மிகைத் தங்கல் தண்டத் தொகை ஆகியவற்றை ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தால் அரசு கடித எண். 250211/11/2014–எப்1, நாள் 16.12.2015–ன்படி நியமிக்கப்பட்ட பொதுத்துறைச் செயலாளர், கூடுதல் காவல் துறை இயக்குநர் (க்யூ பிரிவு) மற்றும் மண்டல அயல்நாட்டினர் பதிவு அலுவலரை உள்ளடக்கிய குழு இவ்விண்ணப்பங்களை ஒவ்வொரு நேர்வாகப் பரிசீலித்து, தொகை செலுத்துவதிலிருந்து, விலக்களித்து உரிய ஆணையிடுகிறது. 2022, ஏப்ரல்

முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, 162 இலங்கை தமிழர்களுக்கு தங்கள் தாயகம் திரும்ப செலுத்த வேண்டிய நுழைவிசைவு கட்டணம் மற்றும் மிகைத்தங்கல் கட்டணமாக ரூ.1,48,78,800/– தொகையானது விலக்களிக்கப்பட்டுள்ளது.

**5.4. இ–சனட்**

நேரடி தொடர்பற்ற மற்றும் காகிதமற்ற முறையில் முத்திரையிடும் சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் "இசனட்" http://esanad.nic.in என்ற இணையதள முகப்பில், தேசியத் தகவல் தொடர்பு மையம் (National informatics Centre) மூலமாக மாநில அளவில், பொதுத்துறையானது அரசு துறைகள், தன்னாட்சி அமைப்புகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், பல்கலைக் கழகங்கள், தமிழ்நாட்டிலுள்ள தேசிய கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை இவ்விணையதளத்தில் ஒருங்கிணைத்து சேவை வழங்கி வருகிறது.

இவ்வதிகார அமைப்புகளால் வழங்கப்படும் ஆவணங்கள், வெளிநாடுகளில் கல்வி பயில்வது, பணிபுரிவது உள்ளிட்ட நேர்வுகளுக்காக அயல்நாட்டுத் தூதரகங்களில், சமர்ப்பிக்க வேண்டி இவ்விணையம் வழியாக விண்ணப்பிக்கும் போது இணையதளம் மூலமாகவே சரிபார்க்கப்பட்டு இத்துறையில் சான்றொப்பமிட்டு வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்படுகிறது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பதாரருக்கு விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இச்சேவை முறையில் 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, 17,360 ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு சான்றொப்பமிடப்பட்டுள்ளன.

## 6. முதல்வரின் முகவரித் துறை

முதல்வரின் முகவரித் துறையானது அரசாணை (நிலை) எண் 944, பொது (Spl–A) துறை, நாள் 03.11.2021

மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு (IIPGCMS), முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. இத்துறையானது மாநிலத்தில் உள்ள பொதுக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒருங்கிணைப்பு அமைப்பாகும். இத்துறையின் முக்கிய நோக்கம், "ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை (IIPGCMS) தளத்தை அமைப்பது, பல வழிகளில் புகார்களை பதிவு செய்வதற்கான அணுகுமுறைகளை அதிகரிப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் குறை தீர்க்கும் தரத்தை மேம்படுத்துதல்" ஆகும். இதுவரை இத்துறை 38 இலட்சம் மனுக்களை பரிசீலித்து, அவற்றுள் 36.5 இலட்சம் மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட்டுள்ளன.

இத்துறை, **'முதலமைச்சரின் உதவி மையம்' என்ற இணையதள அடிப்படையிலான தளத்தை**

உருவாக்கி குறைகளை பதிவு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் வசதிகள் ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மக்கள் குறை தீர்வு தினம், முதலமைச்சரின் தனிப்பிரிவில் நேரடியாக பெறப்பட்ட மனுக்கள், தபால், ஆன்லைன் இணையதள போர்டல் போன்றவற்றில் பெறப்படும் மனுக்களை புகார் மனுக்களாகப் பதிவு செய்வதற்கான அனைத்து முறைகளையும், வழிமுறைகளையும் ஒருங்கிணைத்துள்ளது. முதலமைச்சரின் உதவி மையம், குடிமக்கள் விண்ணப்பத்தின் மூலம் பெறப்படும் செயலி(App) அடிப்படையிலான குறைகளை பதிவு செய்வது எளிதாக்கப்படுகிறது. முறைமையால் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட குறைதீர்வு எண் (Grievance ID) மூலம் குறைகள் கண்காணிக்கப்படுகிறது. குறைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு, நேரடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்படுவதால், குறைகளைத்

தீர்ப்பதில் இடைநிலை அலுவலர்கள் தலையீடின்றி தீர்வுக்கான காலதாமதம் தவிர்க்கப்படுகிறது.

மேற்கூறியவற்றைத் தவிர, இத்துறையில் ஒரு மையப்படுத்தப்பட்ட **முதலமைச்சரின் உதவி மைய அழைப்பு மையம் உருவாக்கப்பட்டு 1100** என்ற கட்டணமில்லா எண்ணில் செயல்படுகிறது. இங்கு குடிமக்கள் வாரத்தின் அனைத்து நாட்களிலும் அழைத்து, தங்கள் குறைகளை பதிவு செய்யலாம். நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைக் கொண்டு புகார்களை பதிவு செய்தல் மற்றும் வழிபடுத்துவதோடு ஒவ்வொரு நாளும் சுமார் 7,000 அழைப்புகளைக் கையாளுகிறது. மேலும், அரசால் புதிய திட்டங்கள் தொடங்கப்படும் போதெல்லாம் இது ஒரு விசாரணை தளமாக செயல்படுவதுடன், தகுதி மற்றும் பிற அம்சங்கள் தொடர்பான விளங்கங்களை அளிக்கிறது. இத்துறை, பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அதன் பயனாளிகளிடமிருந்து கருத்துக்களை சேகரிப்பதன்

மூலம் மற்ற துறைகளுக்கும் அதன் சேவைகளை விரிவுபடுத்துகிறது. மேலும், கொள்கை அமலாக்கத்தில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிய உதவுகிறது. பேரிடர்களின் போது, மாவட்டங்களில் உள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு புகார்களைத் தெரிவிப்பதன் மூலம் மாநில அவசரக் கட்டுப்பாட்டு அறைக்கு இது துணைபுரிகிறது.

**முதலமைச்சரின் உதவி மைய முகப்பு**, துறைகள் மற்றும் மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள் குறைகளை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்க உதவுகிறது. தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் முதலமைச்சரின் உதவி மைய முகப்பு (Dash Board) வாயிலாக குறை தீர்வுகளைக் கண்காணிக்கின்றனர். பொதுமக்களின் குறைகளை திறம்பட நிவர்த்தி செய்வதற்காக, மாநில அளவில் செயலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட

அளவில் மாவட்ட ஆட்சியர்களால் முன்னேற்றம் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த முதலமைச்சரின் உதவி மைய முகப்பு, மாண்புமிகு முதலமைச்சரின் முகப்புடன் இணைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தால் நேரடியாகக் கண்காணிக்கப்படுகிறது. இந்த அமைப்பு, அதிகாரிகளுக்கு எளிதான மற்றும், தேவையான அறிக்கைகளை வழங்குகிறது. மேலும், கள அளவில் குறைகளை அகற்றுவதற்கான தரத்தை கண்காணிக்கும் நுண்ணிய நிலை பகுப்பாய்வை எளிதாக்குகிறது. எனவே, அரசின் குறைதீர்க்கும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் திறம்பட கண்காணித்தல் ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன.

பொதுவாக, எந்தவொரு குறை தீர்க்கும் தளத்திலும், ஒரு கோரிக்கை நிராகரிக்கப்பட்டால்,

மனுதாரர் உயர் அதிகாரிக்கு ஒரு புதிய கோரிக்கையை தாக்கல் செய்கிறார் அல்லது நேர்மறையான பதில்/தீர்வைக் கோரி அதே அதிகாரியிடம் ஒரு மனுவை சமர்ப்பிக்கிறார். முதலமைச்சரின் உதவி மையத்தில் **மேல்முறையீடு செய்தவதற்கான வழிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளதால்** மனுதாரர், தீர்வு திருப்திகரமாக இல்லை என உணர்ந்தால், உயர்மட்ட அலுவலரிடம் மேல்முறையீடு செய்யலாம். இதன்மூலம் மனுவானது தரமான முறையில் தீர்க்கப்படுவதை உறுதிசெய்து, புகார்கள் மிக மேல் நிலைக்கு அனுப்பப்படுவது தவிர்க்கப்படும். மேலும், மேல்முறையீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அலுவலர்களின் செயல்பாடு மாவட்ட ஆட்சியர்களால் மதிப்பிடப்படுகிறது.

ஒரு சிறந்த குறை தீர்க்கும் செயல்முறையானது, எண்ணிக்கையை குறைப்பதைக் காட்டிலும் தரத்தில் கவனம் செலுத்துவதாகும். மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, செப்டம்பர், 2022–இல் மாநில

மற்றும் மாவட்ட அளவில் **தரக் கண்காணிப்புப் பிரிவுகள்** அமைக்கப்பட்டன. நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள குறைகளை சரியான முறையில் தீர்வு காண்பதை உறுதிசெய்து, தரமான தீர்வில் நிலைத்தன்மையை அடைவதே இதன் நோக்கம். மாவட்ட அளவிலான கண்காணிப்பு பிரிவுகள், குறை தீர்வு செய்யப்பட்டவுடன் பொதுமக்களைத் தொடர்பு கொண்டு, தீர்வு குறித்த கருத்துக்களைச் சேகரித்து, அவை, A, B, C என வகைப்படுத்துகின்றன. இவற்றுள், **வகை–A** என்பது குறை திருப்திகரமாக நிவர்த்தி செய்யப்பட்டு, உரிய நடைமுறை பின்பற்றப்பட்ட தீர்வுகளைக் குறிக்கிறது. **வகை–B** என்பது குறைகளைத் தீர்ப்பதற்கு நிதி அனுமதி தேவைப்படும் நிலையில் உள்ளது. இந்த வகை திட்டங்கள் தகுதியான பயனாளிகளின் 'முதுநிலை பட்டியலாக' செயல்படுகிறது. **வகை–C** என்பது மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டவையாகும். இவற்றுள், முறையாக

ஆய்வு செய்யப்படாத மனுக்கள், உயர் அதிகாரிகளால் மறுபரிசீலனை செய்யப்பட்டு, மனுதாரருக்கு இறுதியான பதில் வழங்கப்படுகிறது.

முதல்வரின் முகவரித்துறை, குறை தீர்க்கும் அலுவலர்களின் திறனை மேம்படுத்துவதை மேற்கொள்வதோடு, நடைமுறைகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள் பரவலாக்க வழிவகை செய்கிறது.

## 7. முன்னாள் படைவீரர் நலத்துறை

முப்படை வீரர்கள் நமது தேசிய ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குகின்றனர். இம்முப்படை வீரர்களின் வீரதீரச் செயல்களை மதித்து போற்றுவதுடன், அவர்களின் மறுவாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்கள், மானியங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கி அவர்களின் துயர்களை களைவதிலும், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகளை அளித்து, முன்னாள் படை

வீரர்களின் நலனைக் காப்பதிலும் நாட்டிலேயே பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. மேலும், இந்திய இராணுவத்தில் சேர்வதற்கு இளைஞர்களை அனுப்புவதிலும் தமிழ்நாடு பெரும்பங்கு வகிக்கிறது.

## 7.1. முப்படை வீரர்கள் வாரியம்

முப்படையில் பணிபுரியும் வீரர்களின் பணியினைப் போற்றவும், ஓய்வுபெற்ற வீரர்களின் நலன்களைக் காக்கவும் முதன்முதலில் 1919–ஆம் ஆண்டில் மெட்ராஸ் தரைப்படைவீரர் வாரியம் அமைக்கப்பட்டு, அதற்கான தேவைகள் முடிக்கப்பட்ட நிலையில் 1930–ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர், 1943–ஆம் ஆண்டில், மெட்ராஸ் மாகாண தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் வாரியம் உருவாக்கப்பட்டபோது பழைய மெட்ராஸ் தரைப்படை வாரியம் இணைத்து கொள்ளப்பட்டது. 1956–ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநில தரைப்படை,

கப்பற்படை, விமானப்படை வீரர்கள் வாரியம் எனவும், பின்னர், 1969–ஆம் ஆண்டில் "தமிழ்நாடு மாநில முப்படை வீரர்கள் வாரியம்" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாரியம், மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களைத் தலைவராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**7.2. முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம்**

1974–ஆம் ஆண்டில் தமிழ்நாடு முப்படை வீரர்கள் வாரியம் மற்றும் மெட்ராஸ் தொகுப்பு நிதி அலுவலகம் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் உருவாக்கப்பட்டு, சமூக நலத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. பிறகு, 1976–ஆம் ஆண்டில் இம்முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் பொதுத் துறையின் நிர்வாகக் கட்டுபாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இத்துறையின்

நிர்வாகச் செலவுகள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற பங்கீட்டு விகிதத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர் மற்றும் படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில் அரசு வகுக்கும் பல்வேறு கொள்கைகளையும், நல திட்டங்களையும் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 2500 படைவீரர்கள் ஒவ்வொரு ஆண்டும் படைப்பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் 1,27,454 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 58,479 கைம்பெண்கள் என மொத்தம் 1,85,933 நபர்கள் பதிவு செய்துள்ளனர். முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்ற 30 முன்னாள் படைவீரர் நல மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 7.3. முன்னாள் படைவீரர் நலத் துறையின் முக்கியத் திட்டங்கள் / நிதியுதவிகள்

1. தமிழ்நாடு அரசுத் திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்
2. முன்னாள் படைவீரர் நலத்துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்

### 7.3.1. தமிழ்நாடு அரசுத் திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்

#### 7.3.1.1. வீரதீரச் செயல்களுக்கான விருது, போற்றத்தக்க பணிக்கான பதக்கம் பெற்றவர்களுக்கு பண முடிப்பு

வீரதீரச் செயல்களுக்கான விருது மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு அரசால் பணமுடிப்பு வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, வீரதீர செயல்களுக்கான

விருது மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கம் பெற்ற தமிழ்நாட்டை சேர்ந்த 9 படைவீரர்களுக்கு ரூ. 5.08 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிராந்திய இராணுவத்தில் பதக்கம் பெற்ற தமிழ்நாட்டை சேர்ந்த 12 வீரர்களுக்கு தலா ரூ.4,000/– வீதம் மொத்தம் ரூ. 48,000/– பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**7.3.1.2. போரில் உயிர்நீத்தோருக்கான கருணைத் தொகை**

போர் அல்லது குடிமையியல் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின் போது உயிரிழந்த / ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ. 20 இலட்சம் வரை கருணைத் தொகை தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. மேலும், இக்கருணைத்தொகை தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப்

படையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, உயிரிழந்த படைவீரர்களின் வாரிசுதாரர் ஒவ்வொருவருக்கும் ரூ. 20 இலட்சம் வீதம் மொத்தம் 7 வாரிசுதாரர்களுக்கு ரூ.1.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**7.3.1.3. போர்ப் பணி ஊக்க மானியம்**

தமது ஒரே மகன் / மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோரைக் கௌரவிக்கும் வகையில் ரூ. 20,000/– ரொக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன் / மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ரூ.25,000/– ரொக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கமும் ஒருமுறை மட்டும் வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, 94 பெற்றோர்களுக்கு ரூ.24.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.1.4. இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொகுப்பு மானியம்

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும், இராணுவப் பணிப் பயிற்சியின் போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும் பின்வருமாறு தொகுப்பு மானியம் (Lumpsum Grant) வழங்கப்பட்டு வருகிறது:–

| வ. எண். | வகை | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் (NDA / IMA / Naval / Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 1,00,000/– |

| | | |
|---|---|---|
| 2. | முப்படையில் குறுகியகால படைத்துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 50,000/- |
| 3. | இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள், இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 25,000/- |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31-ம் நாள்வரை, 17 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ரூ.10 இலட்சம் தொகுப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.1.5. கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு

படைப்பணியில் உயிர்நீத்தோர், போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின்

வாரிசுதாரர் ஒருவருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, 32 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.1.6. மறு வேலை வாய்ப்பு அளித்தல்

முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக்காலத்தினை மீதமாகக் கொண்டு படைப்பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசுத் துறை / அரசு சார்ந்த துறைகளிலும் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | வகை | இட ஒதுக்கீடு சதவீதம் |
|---|---|---|
| 1. | பிரிவு "சி" பணியிடங்கள் | 5 |
| 2. | அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்கள் | 10 |

| | | |
|---|---|---|
| 3. | வனக்காவலர் பணியிடங்கள் | 10 |
| 4. | வனப்பாதுகாவலர் | 5 |
| 5. | தேசிய மாணவர் படை அலுவலகங்களில் இலஸ்கர், ஓட்டுநர், இரவுக் காவலர்கள் பணியிடங்கள் | 25 |
| 6. | சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" பணியிடங்கள் | 5 |
| 7. | கால்நடை ஆய்வாளர் | 5 |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, அரசு / அரசு சார்ந்த / வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் "சி" பிரிவில் 50 நபர்களும், "டி" பிரிவில் 41 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**7.3.1.7. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு**

பல்வேறு கல்வி நிலையங்களில் உயர் கல்விக்கு (மருத்துவம் / பொறியியல் உட்பட) முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது:–

| வரிசை எண் | கல்வியின் பெயர் | இட ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | பி.இ (பொது) (அண்ணா பல்கலைக்கழகம்) | 150 |
| 2. | பி.இ. (லேட்டரல் என்ட்ரி) (அண்ணா பல்கலைக்கழகம்) | 15 |
| 3. | எம்.பி.பி.எஸ். | 10 |
| 4. | பி.டி.எஸ். | 1 |
| 5. | பி. பார்மஸி | 1 |
| 6. | **டி. பார்மஸி**<br>**1.** மதுரை | 4 |
| | 2. கோயம்புத்தூர் | 2 |
| | 3. தஞ்சாவூர் | 2 |
| 7. | பி.எஸ்ஸி. நர்சிங் | 4 |
| 8. | டிப்ளமா நர்சிங் | 57 |
| 9. | பி.பி.டி | 1 |
| 10. | **இந்திய மருத்துவம்**<br>பி.எஸ்.எம்.எஸ் (B.S.M.S.) | 1 |

| | | |
|---|---|---|
| | பி.ஏ.எம்.எஸ் (B.A.M.S.) | 1 |
| | பி.யு.எம்.எஸ் (B.U.M.S.) | 1 |
| | பி.எச்.எம்.எஸ் (B.H.M.S.) | 1 |
| | பி.ஒய்.என்.எஸ் (B.Y.N.S.) | 2 |
| 11. | **பி.எட்., (இளநிலை கல்வியியல்)** ஒவ்வொரு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் | 1 |
| | அண்ணாமலை பல்கலைக் கழகம் | 2 |
| | அழகப்பா பல்கலைக் கழகம் | 1 |
| | அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம் | 1 |
| 12. | டி.டி.எட் (ஆசிரியர் பட்டயப் பயிற்சி) | ஒவ்வொரு கல்வி நிறுவனங்களில் தலா 3 இடங்கள் |
| 13. | பி.எஸ்ஸி (வேளாண்மை) | 6 |

| | | |
|---|---|---|
| 14. | பி.எஸ்ஸி (தோட்டக்கலை) | 1 |
| 15. | பி.இ.(வேளாண்மை) | 1 |
| 16. | ஐ.டி.ஐ. (தொழிற்பயிற்சி பயிலகம்) | ஒவ்வொரு ஐ,டி.ஐ.பயிற்சி நிறுவனத்திலும் தலா 5 இடங்கள் |
| 17. | பாலிடெக்னிக் (தொழில்நுட்ப பட்டயப்படிப்பு) | 80 |
| 18. | இளங்கலை (ம) கிராப்ட்ஸ் | 4 |
| 19. | பி.வி.எஸ்ஸி & ஏ.எச் | 2 |
| 20. | பி.எப்.எஸ்ஸி | 1 |
| 21. | பி.டெக் (உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம்) | 1 |
| 22. | **இளங்கலை பட்டப்படிப்பு** | ஒவ்வொரு கல்லூரியிலும் தலா 6 இடங்கள் |
| | | இரண்டு கிளைகளுக்கு |

| | | |
|---|---|---|
| | | மேல் கொண்டுள்ள கல்லூரிகளில் தலா 2 இடங்கள் |
| 23. | பாலிடெக்னிக் (பகுதி நேரம்) | 1 |
| 24. | பி.எல்.(3/5 ஆண்டுகள்) | 1 சதவீதம் |
| 25. | பி.ஏ.பி.எல் (ஆனர்ஸ்) | 1 சதவீதம் |

### 7.3.1.8. இரு குடும்ப ஓய்வூதியம்

முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு அரசில் மறுவேலைவாய்ப்பினைப் பெற்று, ஓய்வு பெற்று மாநில ஓய்வூதியம் பெற்றவர்களின் வாரிசுதாரர்களுக்கு இரு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### 7.3.1.9. பதினைந்து ஆண்டு கால இராணுவப் பணியினை பட்டதாரி கல்விக்கு இணையாகக் கருதுதல்

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று (இந்திய இராணுவத்தின் சிறப்பு சான்றிதழ் அல்லது கப்பல்

படை / விமானப் படை ஆகியவற்றில் அதற்கு இணையான தகுதி) இராணுவத்தில் பதினைந்து ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்கள் பட்டப்படிப்பு தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள குரூப் 'சி' பணியிடங்களில் நியமனம் செய்ய தகுதியுடையவராகிறார்கள்.

### 7.3.1.10. கோயில் பாதுகாப்புப் படை

தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாக்கும் பொருட்டு கோயில் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாப்புப் பணியில் 1100 முன்னாள் படைவீரர்கள் தொகுப்பூதியத்தில் கோயில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### 7.3.1.11. தேர்தல் பாதுகாப்புப் பணி

நாடாளுமன்றம் / சட்டமன்றம் / உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின் போது பாதுகாப்புப் பணியில் இருக்கும் காவல்துறையினருக்கு உதவிடும் வகையில் முன்னாள் படைவீரர்கள் தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அந்த வகையில், சுமார் 10,000 முன்னாள் படைவீரர்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் மதிப்பூதியம் அடிப்படையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

## 7.3.2. முன்னாள் படைவீரர் நலத்துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் நிதியுதவிகள்

### 7.3.2.1. கொடிநாள் நிதி

இந்நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு கொடிநாள் நிலைக்குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்கள் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவார்.

முன்னாள் படைவீரர்களுக்கு, திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம் தொடர்பான மானியங்கள், சிறார்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவி, பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல் ஆகியவற்றை நிறைவேற்றிட கொடிநாள் நிதி திரட்டப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் தொடங்கி அதற்கடுத்த ஆண்டு டிசம்பர் திங்கள் 6–ஆம் நாள் வரை கொடிநாள் நிதி திரட்டப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் கொடிநாள் நிதியானது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி, தொகுப்பு நிதி ஆகிய இருநல நிதிகள் மூலம் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்குமான நலத் திட்ட உதவிகளைச் செயல்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கொடிநாள் நிதி வசூல் இலக்கின் 5 சதவீதம் தொகுப்பு நிதிக்கும், எஞ்சிய வசூல் தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**2021–ஆம் ஆண்டு (07.12.2021 முதல் 06.12.2022 வரை) கொடிநாள் நிதியாக இதுவரை இல்லாத வகையில் ரூ. 53.66 கோடி வசூல் செய்யப்பட்டது,** 2022–ஆம் ஆண்டில் (07.12.2022 முதல் 06.12.2023 வரை), 31.03.2023 வரை ரூ. 6.18 கோடி கொடிநாள் நிதி வசூலிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது முப்படைகளின் கொடி நாள் நிதியானது www.flagday.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலமாகவும் செலுத்தப்பட்டு வருகிறது.

கொடிநாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண். 80G (5) (vi)–இன் கீழ் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்கான நலத் திட்டங்கள், சலுகைகள் பற்றிய விரிவான விவரங்களை உள்ளடக்கிய கொடிநாள் மலர், தமிழ் மற்றும் ஆங்கில

மொழிகளில் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6,76,98,000 ஆகும். மத்திய முப்படை வாரியத்தின் கடித எண்.532 (5) கே.எஸ்.பி/டி, நாள். 02.03.2021–இன்படி, குடிமகனுக்கு ஒரு காசு வீதம் கணக்கீடு செய்து ஒன்றிய அரசின் பங்குத் தொகையாக, 2017 முதல் 2021 வரை, ஆண்டுக்கு ரூ. 6,76,980/– வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 33,84,900/– மத்திய முப்படை வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

### 7.3.2.2. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு முப்படைவீரர் வாரியம் செயல்படுகிறது. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இவ்வாரியத்தின் புரவலர் ஆவார். மேலும், அரசு தலைமைச் செயலாளர் அவர்கள்

துணைத் தலைவராகவும், ஒன்றிய / மாநில அரசு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

அரசுச் சிறப்புச் செயலாளர் அவர்களை அலுவலால் தலைவராக கொண்டு, தமிழ்நாடு முப்படைவீரர் வாரியத்தின் உட்குழுவான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக் குழு செயல்படுகிறது.

கொடிநாள் நிதி வசூல், வைப்பு நிதியின் வட்டி, சொத்துகளிலிருந்து பெறப்படும் உரிமக் கட்டணம் ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரமாக உள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் இரண்டாம் உலகப்போர் நிதியுதவி, ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவிகள், திருமண நிதியுதவி, செயற்கை உபகரணங்களுக்கான நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவிகள் போன்ற உதவிகள் தமிழ்நாடு முன்னாள்

படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு :–**

**(அ) மாதாந்திர நிதியுதவி**

| **வ. எண்.** | **நிதியுதவியின் பெயர்** | **தற்போது வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி (ரூ.)** | **பயனாளர்–களின் எண்ணிக்கை** | **தொகை (ரூ.)** |
|---|---|---|---|---|
| 1. | இரண்டாம் உலகப்போர் (முன்னாள் படைவீரர்) நிதியுதவி | 10,000/– | 50 | 51,90,000/– |
| 2. | உலகப்போர் (கைம்பெண்கள்) நிதியுதவி | 4,000/– | 2112 | 9,53,73,000/– |
| 3. | முதியோர் நிதியுதவி | 4,000/– | 999 | 4,80,43,000/– |
| 4. | தொழுநோய் / காசநோயாளிகளுக்கான நிவாரணம் / மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணம் | 5,000/– | 173 | 99,26,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | பக்கவாத நிவாரணம் / பார்வையற்றோருக்கான நிவாரணம் / புற்றுநோய் நிவாரணம் / மனவளர்ச்சிக் குன்றிய சிறார்களுக்கான நிவாரணம், மனநோய் கொண்ட முன்னாள் படைவீரரின் மனைவி, கைம்பெண்களுக்கான நிவாரணம் | 7,000/- | 882 | 7,24,13,500/- |
| | **மொத்தம்** | | 4216 | 23,09,45,500/- |

## (ஆ) இதர நிதி உதவிகள்

| **வ. எண்.** | **நிதியுதவியின் பெயர்** | **தற்போது வழங்கப்படும் தொகை ரூ.** | **பயனாளர்-களின் எண்ணிக்கை** | **தொகை (ரூ.)** |
|---|---|---|---|---|
| 1. | திருமண மானியம் (இரண்டு மகள்கள்) | 25,000/- | 458 | 1,14,50,000/- |
| 2. | ஈமச்சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்களுக்கு) | 10,000/- | 2091 | 2,09,10,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | ஈமச்சடங்கு மானியம் (கைம்பெண்கள்) | 7,000/- | 708 | 49,56,000/- |
| 4. | மொத்த மானியம் – செயற்கை உபகரணங்கள் மற்றும் கண் கண்ணாடி மானியங்கள் | - | 2031 | 70,31,838/- |
| 5. | வீட்டு கடன் மானியம், வீட்டு வரி மீளப் பெறுதல் மற்றும் வேலைவாய்ப்பு முன் பயிற்சி | - | 129 | 25,94,192/- |
| 6. | நிம்மதி இல்லம் மற்றும் புனே பக்கவாத மறுவாழ்வு மைய உள்நோயாளி செலவினம் ஆகியவை | - | 52 | 26,82,624/- |
| | **மொத்தம்** | | 5469 | 4,96,24,654/- |
| | **பெரு மொத்தம் (அ + ஆ)** | | 9685 | 28,05,70,154/- |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31-ம் நாள்வரை, 9,685 முன்னாள் படைவீரர்களுக்கும்,

அவர்களைச் சார்ந்தோருக்கும் மேற்கண்ட நிதியிலிருந்து பல்வேறு நிதியுதவிகளும் மானியங்களும் ரூ. 28.05 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.2.3. தொகுப்பு நிதி

மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவால் தொகுப்பு நிதி நிருவகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன், அரசு தலைமைச் செயலாளர், தென்மண்டல இராணுவத் தளபதி ஆகியோர் இக்குழுவின் துணைத் தலைவர்கள் ஆவர். இந்நிதியின் நிலையான உட்குழு அரசு தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்நிதியிலிருந்து போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்குவதுடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்

பெறும் வங்கி கடன்களுக்கு வட்டி மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி மானியம் ரூ.2,000/- முதல் ரூ.25,000/- வரை பள்ளிக் கல்வியிலிருந்து முதுகலைக் கல்வி மற்றும் தொழில்நுட்பக்கல்வி வரை வழங்கப்படுகிறது.

2022-23 முதல் இந்திய தொழில் நுட்பக் கழகங்கள் (IITs) இந்திய மேலாண்மை கழகங்கள் (IIMs) மற்றும் தேசிய சட்ட பள்ளியில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 50 ஆயிரமும், சைனிக் பள்ளியில் சேரும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களின் சிறார்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 25 ஆயிரமும் வழங்கப்படுகிறது.

**தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு:-**

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | தற்போது வழங்கப்படும் தொகை (ரூ.) | பயனாளர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | போரில் வீர மரணம் அடைந்தோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை | 1,00,000/– | 8 | 8,00,000/– |
| 2. | போரில் ஊனமுற்றோருக்குக் கருணைத் தொகை | 30,000/– (ம) 50,000/– | 11 | 4,10,000/– |
| 3. | போரில் வீர மரணம் அடைந்தோர், 50%–க்கு மேல் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 1,00,000/– மற்றும் 8 கிராம் தங்கம் | 4 | 4,00,000/– |
| 4. | போரில் 50%–க்கு கீழ் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 50,000/– மற்றும் 8 கிராம் தங்கம் | 2 | 1,00,000/– |
| 5. | கல்வி உதவித் தொகை (பள்ளி கல்வி முதல் தொழிற் கல்வி வரையில்) | 2,000/– முதல் 25,000/– வரை | 4766 | 9,61,52,439/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | போரில் வீர மரணம் அடைந்தோர் / ஊனமுற்றோருக்கு வீடு கட்ட மானியம் | 50,000/– | 1 | 50,000/– |
| 7. | வருடாந்திர பராமரிப்பு மானியம் (அரசிடமிருந்து அடுத்து வரும் நிதியாண்டில் மீளப் பெறப்படும்) | 25,000/– | 472 | 1,19,50,000/– |
| 8. | வங்கி கடன் வட்டி மானியம் (தனி நபர்) | – | 366 | 31,19,864/– |
| 9. | வங்கி கடன் வட்டி மானியம் (சுயஉதவி குழு) | – | 3 | 2,03,880/– |
| 10. | தொகுப்பு மானியம் | – | 17 | 10,00,000/– |
| 11. | முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் தேசிய சட்ட பள்ளியில் பயில்வதற்கான ஊக்கத் தொகை | 50,000/– | 1 | 50,000/– |
| | **மொத்தம்** | | 5651 | 11,42,36,183– |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, 5,651 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு இந்நிதியிலிருந்து

ரூ.11.42 கோடி நிதியுதவிகள் / மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 7.4. இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்

இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்களுக்கு மாவட்ட நிருவாகம் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்காக முகாம் ஒன்றுக்கு ரூ.6 இலட்சம் வீதம் ஐந்து முகாம்களுக்கு ஆண்டிற்கு ரூ.30 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில், கன்னியாகுமரி, திருப்பூர் மற்றும் வேலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் நடைபெற்ற இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்களுக்காக ரூ.18 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 7.5. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரில் மகளிருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்குத் தையற்பயிற்சி அளிப்பதற்காக

வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையல் அலகு செயல்பட்டு வருகிறது. இத்தையல் அலகுகளில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்களைச் சார்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள் / மனைவி / திருமணமாகாத மகள் / திருமணமாகாத சகோதரிகள் / விவாகரத்தான மகள் / விவாகரத்தான சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாத காலத் தையற் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுபவர்களுக்குப் பயிற்சி உதவித் தொகையாக நாளொன்றுக்கு 50 ரூபாயும், கச்சாப் பொருள் வாங்குவதற்காக மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு ஒரு விலையில்லா தையல் இயந்திரமும் வழங்கப்பட்டு வருகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, இத்திட்டத்தின் கீழ் 35 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

**7.6. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்கான உதவித் தொகை**

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற தொழில்நுட்பப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு :–

| வ.எண். | வகை | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு (கீழ்நிலை) | ரூ.3,000/– |
| 2. | தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு (மேல்நிலை) | ரூ.5,000/– |
| 3. | தமிழ் மற்றும் ஆங்கிலம் சுருக்கெழுத்து தட்டச்சு (கீழ்நிலை) | ரூ. 7,000/– |
| 4. | தமிழ் மற்றும் ஆங்கிலம் சுருக்கெழுத்து தட்டச்சு (மேல்நிலை) | ரூ. 10,000/– |

2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, இத்திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.11 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

**7.7. வீட்டு கடன் மானியம்**

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் கைம்பெண்கள் (அவில்தார் படைத்தரம் வரையில்) வீடு கட்ட / வீடு வாங்க பெறப்படும் கடன் தொகைக்கு ரூ. 1 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, 24 நபர்களுக்கு ரூ. 24 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**7.8. படைவீரர் மாளிகை / முன்னாள் படைவீரர் மையம் / முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்**

நலத் திட்டங்களுக்காக நிதி திரட்டும் வகையில், படைவீரர் மாளிகை–10, முன்னாள் படைவீரர் மையம்–20, முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்–1 ஆகிய

கட்டடங்கள் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கும் வருவாய், முன்னாள் படைவீரர் நல நிதியுடன் சேர்க்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, இச்சொத்துகள் மூலம் ரூ.3.31 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 7.9. மின் ஆளுமைத் திட்டம்

முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசியத் தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்களை சார்ந்த கைம்பெண்களின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு பணியாளர் நியமனம் செய்யப்பட்டு மின் ஆளுமையில் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், கணினியில் நேரடியாகப் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் ஆகியவை மின் ஆளுமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை பெறுவதற்கு முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்கள் இணைய வழி மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 7.10. சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் பல்வேறு சுயவேலைவாய்ப்புகளை அதிகரித்திட அரசு முனைப்பாக உள்ளது. சுய வேலை வாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ. 10 இலட்சம் வரையிலான வங்கி கடன்களுக்கு 75 சதவீதம் வட்டி மானியமும், சுய

உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ரூ.15 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 100 சதவீதம் வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, இத்திட்டங்களின் மூலம் ரூ.33.23 இலட்சம் மானியமாக 366 முன்னாள் படைவீரர்களுக்கும், 3 சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மறுவேலைவாய்ப்பு வழங்கவும், பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (TEXCO), நிறுவன (கம்பெனிகள்) சட்டம் 1956–ன்படி, 1986ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகமானது, முன்னாள் படைவீரர் நல

இயக்ககத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள முன்னாள் படைவீரர்களைப் பல்வேறு ஒன்றிய, மாநில அரசு நிர்வாகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய வாரியங்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலிய உதவியாளர்கள், தீயணைப்பாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள் ஆகிய பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி மறுவேலைவாய்ப்பு வழங்கும் "மனித வள முகமையாக" செயல்பட்டு வருகிறது.

இக்கழகம், தற்சார்பு பெற்ற இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் ஆகும். 31.03.2023 அன்றைய நிலவரப்படி, 6,732 பாதுகாவலர்கள், 1,244 ஓட்டுநர்கள், 172 இளநிலை உதவியாளர்கள், 11 தொலைபேசி இயக்குபவர்கள், 52 துப்பாக்கி ஏந்தியக் காவலர்கள், 27 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 8 செவிலியர்

உதவியாளர்கள் உட்பட மொத்தம் 8,226 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒன்றிய மற்றும் மாநில அரசு நிர்வாகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய வாரியங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், இந்து சமய அறநிலையத் துறையை சார்ந்த கோயில்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவிகளை கண்காணிக்கும் பொருட்டு, 49 முன்னாள் படைவீரர்கள் உதவி பாதுகாப்பு அலுவலர்களாகப் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். அதேபோன்று, ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) கல்குவாரிகளில் கற்கள் கொண்டு செல்வதை கண்காணிக்கும் பொருட்டு 6 முன்னாள் படைவீரர்கள் உதவி பாதுகாப்பு அலுவலர்களாகவும், சென்னை துறைமுகத்தில் நிர்வாக அலுவலர்களாக 4 முன்னாள் படைவீரர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதில், 2,616 முன்னாள் படைவீரர்கள் ஒன்றியப் புனரமைப்புத் தலைவர் ஊதிய விகிதத்தில் 10 சதவீதம் சேவை கட்டணத்துடனும், 5,610 முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு குறைந்தபட்ச ஊதிய விகிதத்தில் 8 சதவீதம் சேவை கட்டணத்துடனும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 8.1. மின் திருட்டுத்தடுக்கும் படை

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகத்தில் நடைபெறும் மின் திருட்டை தடுக்கும் பொருட்டு, அவில்தார்கள் மற்றும் இளநிலை படை அலுவலர்கள் நிலையில் 215 முன்னாள் படைவீரர்களைக் கொண்டு, "மின் திருட்டுத்தடுக்கும் படை" அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் மூலம் ரூ.223.35 கோடி அளவிற்கு மின் திருட்டு தடுக்கப்படுகிறது.

### 8.2. சுற்றுலா பாதுகாப்புப் படை

தமிழ்நாடு சுற்றுலாத் துறையில், அவில்தார்கள் மற்றும் இளநிலை படை அலுவலர்கள் நிலையில்,

31 முன்னாள் படைவீரர்களைக் கொண்டு "சுற்றுலா பாதுகாப்புப் படை" அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரம், உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி மற்றும் கொடைக்கானல் ஆகிய ஐந்து முக்கியச் சுற்றுலா தளங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**8.3. டெக்ஸ்கோவிற்கு புதிய சொந்தக் கட்டடம்**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், ரூ. 19.19 கோடி செலவில் 760.16 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் வாங்குவதற்கும், அதில், 15,708.98 சதுர அடியில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்த நிலையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து புதிய கட்டட ஒப்படைப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், டெக்ஸ்கோ, புதிய கட்டடத்தில், ரூ. 2.20 கோடி செலவில் கட்டட உள் கட்டமைப்பு

வேலைப்பாடுகள் செய்யும் பணியை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு வழங்கி, அதன் பணிகள் நடைபெற்று வருகின்றது.

## 8.4. இதர நலத்திட்டங்கள்

முன்னாள் படைவீரர்களின் நலன் கருதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் கீழ்க்காணும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:–

**விபத்துக் காப்பீட்டுத் திட்டம்** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்துப் முன்னாள் படைவீரர்களுக்கும் "விபத்துக் காப்பீட்டுத் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு, இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்கள் ஓய்வு பெற்ற பின்னர்

பணப்பயன் அடையும் வகையில் "தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு. ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.250/– செலுத்தப்பட்டு வருகிறது. இதனால், ஆண்டுக்குத் தோராயமாக ரூ.2.50 கோடி செலவிடப்படுகிறது.

**ஈமச்சடங்கு நிதி** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்கள் மரணமடைந்தால் ஈமச்சடங்கு நிதி ரூ.5,000/– வழங்கப்பட்டு வருகிறது.

## 9. மாநில மனித உரிமைகள் ஆணையம்

மனித உரிமைகளை பாதுகாப்பதற்காகவும், 1993–ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகவும், மாநில மனித உரிமைகள் ஆணையம் 1997–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

மனித உரிமைகள் பாதுகாப்புத் திருத்தப்பட்ட சட்டம், 2006 (மத்திய சட்டம் 43/2006)–இன் சட்டப்பிரிவு 21(2)–இன்படி, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஒருவரை தலைவராகவும்; உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த அல்லது இருக்கும் ஒருவர் அல்லது மாவட்ட நீதிபதியாக ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தவரை ஒரு உறுப்பினராகவும்; மற்றும் மனித உரிமைகள் துறை பற்றி அறிந்தவர், அல்லது நேரடியாக மனித உரிமைகள் பற்றிய அனுபவமுடையவரை மற்றொரு உறுப்பினராகவும் கொண்டிருக்கும்.

மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டுள்ள காரணத்தினால் புகார்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. தமிழகத்தில் மாநில மனித உரிமைகள் ஆணையம் செயல்படுத்த துவங்கிய முதல்

ஆண்டிலேயே 2,162 புகார்கள் ஆணையத்தால் பெறப்பட்டு அடுத்தடுத்த ஆண்டுகளில் புகார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2022, ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2023, மார்ச் 31–ம் நாள்வரை, இவ்வாணையத்திற்கு 5,501 புகார்கள் வரப்பெற்று அதனில் 4,096 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் குறித்த பின்வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்கங்கள் ஆகியவை ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகின்றன:–

அ) சுகாதார உரிமை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 08.02.2022 அன்று நடத்தப்பட்டது.

ஆ) பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதற்கான போலீஸ் பாய்ஸ் கிளப்பை மேம்படுத்துவதற்காக 05.03.2022 அன்று விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இ) சர்வதேச மகளிர் தினம் 08.03.2022 அன்று கொண்டாடப்பட்டது.

ஈ) மனித உரிமை மேற்கோள்கள் குறித்த ஒரு நாள் பயிலரங்கம் 24.03.2022 அன்று நடைபெற்றது.

உ) "மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி" குறித்த வெள்ளி விழா ஆண்டு கருத்தரங்கு 18.04.2022 அன்று நடைபெற்றது.

ஊ) "மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு" என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கிடையே வினாடி–வினா போட்டி 23.05.2022 அன்று நடைபெற்றது.

எ) சர்வதேச மனித உரிமைகள் தினம், டிசம்பர் 10, 2022 அன்று கொண்டாடப்பட்டது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மனித உரிமை உறுதிமொழி எடுத்துக் கொள்வதோடு, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10–ஆம் தேதி மனித உரிமைகள் தினத்தை விமர்சையாக கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில், கல்லூரி மாணவர்களுக்கு இடையே பேச்சுப் போட்டி, கருத்தரங்கு கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், நேரடியாக பணி நியமனம் பெறும் காவல்துறை மற்றும் சிறைத்துறை அதிகாரிகளுக்கு பயிற்சியும் மற்றும் சட்டம், உளவியல், குற்றவியல், மனித உரிமைகள் குறித்த கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு நிலையப் பயிற்சியும் (Internship training) ஆணையத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

மாநில மனித உரிமைகள் ஆணையம் தொடங்கி 25 ஆண்டுகள் முடிந்த நிலையில் வெள்ளிவிழா ஆண்டு 06.08.2022 அன்று சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. அதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, நினைவு புத்தகம் மற்றும் அஞ்சல் தலைகளை வெளியிட்டார். மேலும்,

அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மாநில மனித உரிமைகள் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

அ. ஒருநாள் கருத்தரங்கு மற்றும் ஆலோசனைக் கூட்டம் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆ. ஆணையத்தின் இணையதளம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இ. மனித உரிமைகள் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் குறித்த பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 10. முடிவுரை

கல் வீடாக இருந்த நிர்வாகம் இன்று கண்ணாடிக் கூண்டாக ஆகிவிட்டது. திறந்த நிர்வாகமே சிறந்த நிர்வாகமாகச் செயல்பட முடியும், வெளிப்படையான நிர்வாகமே வேகமாகப் பணியாற்ற முடியும் என்பது இன்றைய நடைமுறை. மின்னணுச் சாதனங்கள் எதிர்பார்ப்புகளை எகிற வைத்து விட்டன. மக்கள் மின்னல் வேகத்தில் தீர்வுகளை எதிர்பார்க்கிறார்கள். அலுவலர்கள் நேர்மையாகவும், விரைவாகவும், விழிப்புணர்வுடனும், அக்கறையுடனும், பரிவுடனும், பண்புடனும், சமூக உணர்வுடனும் செயல்பட வேண்டும் என்பதே இன்று பொது மக்களின் தேவை. அதை நெறிப்படுத்துவற்குப் பொதுத் துறையே முதுகுத்தண்டாய் முன் நிற்கிறது. அத்தனை துறைகளையும் மூளையின் இரு

கோளங்களையும் ஒருங்கிணைக்கின்ற பெருமூளை பிணைப்பியைப்போல பொதுத் துறை செயல்படுகிறது. அரசின் திட்டங்கள் உரியவர்களைச் சென்றடைய அலுவலர்கள் ஆற்றும் கடமை முக்கியம். அவர்கள் நேர்மையாகச் செயல்படுகிறார்களா என்பதை நுட்பமாகக் கண்காணிக்கும் பணியைப் பொதுத் துறை செய்து வருகிறது. கமுக்கமான பல கோப்புகள் சிறிதும் வெளியே கசியாமல் கையாளப்படுகின்றன.

பொதுத் துறையின் அலுவலர்கள் ராணுவக் கட்டுப்பாட்டோடு செயல்படுகிற சீருடை அணியாத சிப்பாய்கள். பல நிகழ்வுகளில் உறக்கமின்றி, பசியை மறந்து பணியாற்றுகிறவர்கள். எப்பணியை ஒப்படைத்தாலும் அப்பணியை அறப்பணியாக ஆற்றும் அர்ப்பணிப்பாளர்கள். இத்துறை பல துறைகளுக்குச் சக்தியைப் பாய்ச்சும் இதயமாகவும், சுவாசத்தை

அளிக்கும் நுரையீரலாகவும் செயல்படுவதால் அரசு இயந்திரம் எப்போதும் ஆயத்த நிலையில் இருக்க முடிகிறது. பரிசுகளோ பதக்கங்களோ வழங்கப்படாமல் பணியையே பதக்கமாக, வியர்வையையே பன்னீராகக் கருதி பணியாற்றும் துறை பொதுத் துறை.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.